**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 2 - 2020**

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 2 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2016 மார்ச் 17 ஆந் திகதிய எஸ்எல்- பி 115 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாம், அப்போதைய நகர அபிவிருத்தி, மற்றும் நீர் வழங்கல் அமைச்சான தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுரம் மாவட்டத்தில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் செயற்திட்டப் பகுதியில் சுகாதார நிலை மற்றும் சுற்றாடல் வாழ்க்கைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 31,598 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 27,301 மில்லியனானதுடன் அதில் ரூபா 26,779 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 23,137 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், அதல் ரூபா 27,196 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 23,498 மில்லியன் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக செய்யப்பட்டிருந்தது அதேநேரம் செயற்திட்டம் - கட்டம் 1 இன் நடவடிக்கைகளிற்காக ரூபா 4,401 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 3,803 மில்லியன் செயற்திட்டம் - கட்டம் 1 இன் செயற்பாடுகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் கட்டம் 2 அதன் நடவடிக்கைகளை 2017 யூனில் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 வரை வெளிநாட்டு நாணய கொடுக்கல் வங்கல்கள் மீதான நாணய மாற்று இலாபம் ரூபா 6.15 மில்லியனாக இருந்ததுடன் இது விசேட (ஜென்) கணக்கு மீதியாக காட்டுவதற்குப் பதிலாக தவறாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களை மெய்மையாய்வு செய்வதற்கு விசேட (ஜென்) கணக்கின் மாதாந்த வங்கிக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 6.15 | ERD ஆல் நாளதுவரையாக்கிய கைதவிர்ப்பு அறிக்கை பிரகாரம் ஒவ்வொரு பட்டியல்களினதும் நாணய மாற்று இலாபம் / நட்டங்கள் உள்ளன. அந்த மீதிகள் தற்போதைய நடைமுறை மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் நடைபெறும் வேலைக் கணக்கிற்குள் எடுக்கப்பட்டிருந்தன. | இக்குறைபாட்டினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தின் பௌதீக முன்னெற்றம்

12 கூறுகளை கொண்டுள்ள செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2017 யூனில் தொடங்கியிருந்தது. அதில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விரிவான வடிவமைப்பு மற்றும் கொள்வனவு உதவிக்கான ஆலோசனை ஒப்பந்தம், 02 டபிள் கப் வாகன வழங்கல் மற்றும் விநியோக ஒப்பந்தம் என்பன மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. எனவே, 2020 திசெம்பர் 31 வரையும் செயற்திட்டத்தின் குறிப்பிடத்தக்களவு பௌதீக முன்னேற்றம் எதுவும் காட்டப்பட்டிருக்கவிலலை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தின் முன்னேற்றம் பின்வருமாறு இருந்தன.

| இல | செயற்திட்ட கூறு / ஒப்பந்தம் | 2020 திசெம்பர் 31 அளவில் பட்டியலிடப்பட்ட நடவடிக்கை | பட்டியலிடப்பட்ட காலப்பகுதி | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னேற்றம் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | நீர் தேக்க வசதி, தணண்ணீர் சுத்திகரிபபு பொறி, தண்ணீர் சேகரிப்பு கட்டமைப்பு, எந்திவியல், மின்னியல் மற்றும் கட்டிட வேலைகள் என்பவற்றின் நிர்மாணம் - Lot A | கேள்வி ஆவணம் மற்றும் கோள்வி கோரல் என்பவற்றிற்கு JICA முடிவு | 2020 நவம்பர் முதல் 2021 மார்ச் மாதம் வரை | 2021 யூலை 31 வரையும் பூர்த்தியாக்கப் படவில்லை. | ஒப்பந்தம் மற்றும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலில் தாமதமாகும் சாத்தியம். | தண்ணீர் வளத்தின் மாற்றம் காரணமாக கேள்வி ஆவணம் தயாரித்தலில் தாமதம். கோவிட்-19 போக்குவரத்து தடை மற்றும் 2021 மே முதல் யூலை வரையான காலத்தின் போது வரையறுத்த தொழிலாளர் படையணி என்பன காரணமாக கொளவனவு தாமதப்பட்டிருந்தது. | கொள்வனவு திட்டத்திற்கமைய கொள்வனவு நடைமுறையை அமுலாக்கி பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | DI குழாய், உயர் அடர்த்தி பொலிஎத்னிக் குழாய் (HDPE) பிரதான பரிமாற்றம் மற்றும் HDPE பிரதான விநியோகம் என்பவற்றினை வழங்கி பொருத்துதல் - Lot B. | கோள்வி கோரல் | 2020 திசெம்பர் முதல் 2021 பெப்ரவரி வரை | 2021/08/18 இல் கோள்வி கோரப்பட்டது. | ஒப்பந்தம் மற்றும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலில் தாமதமாகும் சாத்தியம். | 2020.09.08 இல் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்கம் விதிக்கப்பட்ட கோவிட்-19 பயணத்தடை மற்றும் 2021 மே முதல் யூலை வரையான காலத்தின் போது வரையறுத்த தொழிலாளர் படையணி போன்றன காரணமாக JICA ஒத்துழைப்பு தாமதப்பட்டிருந்தது. | கொள்வனவு திட்டத்திற்கமைய கொள்வனவு நடைமுறைகளை அமுலாக்கி பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (இ) | பதவியா மற்றும் ஹெப்பிட்கெல்லாவ பிரதேச செயலக பிரிவிற்காக HDPE, DI பிரதான விநியோகம் என்பன வழங்கிப் பொருத்துதல் மற்றும் சேவை இணைப்புகளை வழங்குதல் - Lot C1 | கோள்வி கோரல் மற்றும் முடிவுறுத்தல் | 2020 நவம்பர் - 2021 சனவரி மாதம் வரை | 2021 யூலை 21 இல் கோள்வி கோரப்பட்டது. | ஒப்பந்தம் மற்றும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலில் தாமதமாகும் சாத்தியம். | கோவிட்-19 பயணத் தடை மற்றும் வரையறுத்த தொழிலாளர் படையணி போன்றன காரணமாக | கொள்வனவு திட்டத்திற்கமைய கொள்வனவு நடைமுறைகளை அமுலாக்கி பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஹகஸ்டகஸ்டிகிலிய மற்றும் ஹொரவபொத்தான பிரதேச செயலக பிரிவிற்காக HDPE, பிரதான விநியோகம் என்பவற்றினை வழங்கி பொருத்துதல் மற்றும் சேவை இணைப்புகளை வழங்குதல்- Lot C2 | கோள்வி கோரல் மற்றும் முடிவுறுத்தல் | 2020 திசெம்பர் - 2021 மார்ச் மாதம் வரை | 2021 யூலை 28 இல் கோள்வி கோரப்பட்டது. | ஒப்பந்தம் மற்றும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலில் தாமதமாகும் சாத்தியம். | TECs, SCAPC, CPCC இடமிருந்தான அனுமதிகள் மற்றும் ERD ஊடாக JICA ஆல் இறுதி முடிவு பெறுவதில் கோவிட்-19 பயணத் தடை காரணமாக எதிர்பார்த்த காலத்தை விட அதிக காலம் எடுத்திருந்தது. | கொள்வனவு திட்டத்திற்கமைய கொள்வனவு நடைமுறைகளை அமுலாக்கி பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | HDPE, பிரதான விநியோக குழாய்களை வழங்கி பொருத்துதல் மற்றும் சேவை இணைப்புகள் மற்றும் 250 கமீ இயலளவு தண்ணீர் கோபுரத்தின் நிர்மாணம் - Lot C3 | 2020 இல் பட்டியலிடப் படவில்லை. | - | - | ஒப்பந்தம் மற்றும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலில் தாமதமாகும் சாத்தியம். | ANWSP– கட்டம் II இன் நோக்கெல்லைக்குள் புதிய பொதி Lot C 3 உள்ளடக்கப்பட்டது. | கொள்வனவு நடைமுறையை தொங்கி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஊ) | நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை சேவை - Lot F | கோள்வி கோரல் மற்றும் முடிவுறுத்தலின் பரிந்துரைக்கான வேண்டுகை. | 2020 திசெம்பர் - 2021 சனவரி மாதம் வரை | 2021 யூலை 14 இல் RFP கோரப்பட்டது. | மேற்பார்வை மற்றும் நிர்மாணத்திற்கான ஆலோசனை சேவையின் கொள்வனவு தாமதமாகும் சாத்தியம். | அழைப்பு கடிதம் மற்றும் RFP ஆவணம் 2021 யூலை 14 இல் தெரிவு செய்யப்பட்டு ஆலேசனையாளர்களிற்கு வழங்கப்பட்டது. | கொள்வனவு திட்டத்திற்கமைய கொள்வனவு நடைமுறைகளை அமுலாக்கி பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பு மற்றும் கொள்வனவு உதவிக்கான ஆலோசனை ஒப்பந்தம் 2021 ஆகஸ்ட் 31 இல் காலாவதியாகியிருந்தது, 12 நிர்மாண ஒப்பந்தங்களில், 10 ஒப்பந்தங்கள் 2021 ஆகஸ்ட் 31 திகதியான காலாவதி திகதிவரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வகல்கட முதல் ஜன் ஓயா வரை நீர் வள மாற்றம் மற்றும் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் என்பன காரணமாக ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் எதிர்பாராத தாமதம் ஏற்பட்டது. | செயற்திட்டத்தின் கொள்வனவு உதவி வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரம் நடாத்துவதற்காக ஆலோசனை ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 4 மில்லியன் ஒமுக்கப்பட்டிருந்த போதிலும் பொது மக்கள் விழ்ப்புணர்வு பிரச்சாரம் மற்றும் கருத்தரங்கு எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கோவிட்-19 நோய்தொற்று பாதிக்கப்பட்ட நாடாக இருந்தமையால் நாங்கள் பட்டியலிடப்பட்டவாறு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு இயலாதிருந்தது. | ஒப்பந்தத்தை வழங்கல் மற்றும் ஆலோசனை வழங்க முன்னர் பொது மக்கள் நிகழ்ச்சித்திட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பாதுகாப்பற்ற நிலத்தடி நீர் மற்றும் கிட்னி நோய் பாதிப்பு என்பவற்றில் தங்கியிருக்கின்ற மக்கள் உள்ள கெப்பிட்டிக்கொல்லாவ, பதவியா, ஹொரவபொத்தான மற்றும் ஹகட்டகஸ்டிக்கிலிய பிரதேச செயலக பிரிவு செயற்திட்டம் கட்டம் II மேவுகின்றது. எனவே, அரசாங்கம் அந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு முன்னுரிமை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட ஒப்பந்தங்களின் கொள்வனவு நடைமுறை கொள்வனவு திட்டத்திற்கமைய இருக்கவில்லை. இதன் விளைவால் திருத்தப்பட்ட செயற்திட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் ஐயத்திற்கிடமாக உள்ளது. | நீர் வளம் மற்றும் செயற்திட்டத்தின் நோக்லெல்லை மாற்றம் மற்றுமு் கோவிட்-19 தோற்று நோய் என்பன காரணமாக கருத்திற்கொள்ளக்கூடிய காலம் எடுத்திருந்தது, ஆனால் நாங்கள் முழுச் செயற்திட்டங்களையும் அடைவதற்கு எங்களுடை அதிகூடிய பங்களிப்பிற்கு அதிகளவு உறுதியும் முயற்சியும் எடுத்துள்ளோம். | பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கும் செயற்திட்ட வேலைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் விசேட கவனம் செலுத்த வேண்டும். |

## 3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | ஆண்டிற்கான வெளிநாட்டு நிதி ஒதுக்கீடு ரூபா 123.05 மில்லியனாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது செயற்திட்டம் ரூபா 171.21 மில்லியன் செலவழித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டிற்கு மேலாக ரூபா 48.16 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது. | செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் 2020 ஆம் ஆண்டிற்காக எதிர்பாரத்த தொகை ரூபா 208.63 மில்லியனாகும். 2020 ஆம் ஆண்டிற்காக திறைசேரியால் வழங்கப்பட்ட தொகை ரூபா 123.03 மில்லியனாகும். செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் காட்டுப்பாட்டை விட திறைசேரி மூலமான ஒதுக்கீடு பின்னடைவாக உள்ளது. | அந்த நீர் வழங்கல் செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கியிருந்த போதிலும் தேவையான நிதி ஒதுக்கீடுகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் ANWSP – கட்டம் II இற்காக உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |